# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



## ஒரு தேவாலயத்தின் தலைவன் இயேசுவை சந்திக்கிறான்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Byron Unger; Lazarus

தழுவியவர்: M. Maillot; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2017 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

ஒரு நாள் இயேசு தேவாலயத்திற்கு சென்றபோது, ஜனங்கள் தேவனுடைய ஆலயத்தை கனவீனப்படுத்துவதை கண்டார்.



அவர்களோடு, மாடு, புறாக்களை விற்று, பனமாற்று வேலையை ஆலயத்தில் செய்தார்கள்.



கயிற்றினாலே ஒரு சாட்டையை உண்டுபண்ணி, இயேசு அங்கிருந்த வி நியோகஸ்தர்களை ஆலயத்திலிருந்து துரத்திவிட்டார். "இந்த பொருட்களை இங்கேயிருந்து ...



... எடுத்துச்செல்லுங்கள்," என்று அவர் கட்டளையிட்டார். "என்னுடைய தகப்பனின் வீட்டை வியாபார ஸ்தலமாக மாற்றாதீர்கள்." இயேசு தன்னுடைய தகப்பனின் வீட்டை சிநேகித்தார்.





அங்கிருந்த
தலைவர்கள்
இயேசு அப்படிச்
செய்வதற்கான
அதிகாரம் பெற்றவர்
என்பதற்கான
அடையாளத்தை
கேட்டார்கள்.
"இந்த ஆலயத்தை
இடித்துப்போடுங்கள்
மற்றும் அதை ...



... மூன்று
நாட்களில்
எழுப்புவேன்,"
என்று இயேசு
கூறினார்.
நிச்சையமாக
முடியாது! இந்த
ஆலயத்தை
கட்டுவதற்கு
நாற்பத்தாறு
வருடமாயிற்று.

ஆனால் இயேசுவோ தன்னுடைய
சரீரத்தைப் பற்றி சொன்னார்.
தேவாலயத்தைப்போல,
அவருடைய சரீரம்
தேவன் வாழுகிற
ஸ்தலமாயிருந்தது.



இயேசு தான் சிலுவையில் மரிப்பேன்
என்றும் மூன்றாம் நாளிலே
தேவன் மரணத்திலிருந்து
உயிர்ப்பிப்பார்
என்றும் அவருக்குத்
தெரிந்திருந்தது.





இரவிலே,
தேவாலயத்தின்
தலைவன்
ஒருவன்
இயேசுவிடம்
வருகை தந்தான்.
அற்புதங்களை
பார்த்ததினாலே,
இயேசு
தேவனால் ...



...
அனுப்பப்பட்டவர் என்று அவன் அறிந்திருந்தான். நிக்கோதேமு இயேசுவிடம் வந்து தேவனைப் பற்றி அதிகம் அறிய விரும்பினான்.



தேவனுடைய
இராஜ்ஜியத்திற்குச்செல்ல
ஜனங்கள்
மறுபடியும்
பிறக்கவேண்டும்
என்று இயேசு
நிக்கோதேமுவிடம்
சொன்னார்.
நிக்கோதேமு
புரிந்துகொள்ளவில்லை.



முதிர்வயதான
மனிதன் எப்படி
குழந்தையாக
முடியும்?
மேற்கொண்டு,
அவன் ஒரு
சமய ஈடுபாடு
உடையவனாயிருந்தான்.
இது போதாதா?



"ஆவியினாலே
பிறப்பது
ஆவியாயிருக்கும்,"
என்று
இயேசு
சொன்னார்.
"தேவனுடைய
ஆவியானது
காற்றைப்போலிருக்கிறது.



ஜனங்களால்
காற்றை பார்க்கவோ,
புரிந்துகொள்ளவோ
முடியாது.
காற்று என்ன
செய்கிறது என்று
அவர்களால்
பார்க்க முடியாது."



இஸ்ரவேல் ஜனங்கள் பல நாட்களுக்கு முன்னால் மோசேயிடம் முறையிட்டதை இயேசு நிக்கோதேமுக்கு ஞாபகப்படுத்தினார்.



"எங்களுக்கு உணவில்லை, தண்ணீரில்லை, மற்றும் தேவன் கொடுக்கிற, இந்த மன்னாவை நாங்கள் வெறுக்கிறோம்," என்று அழுதார்கள்.

ஜனங்களுடைய பாவம்
தேவனை கோபப்படுத்தியது.



அவர் கொள்ளிவாய்
சர்ப்பங்களை அவர்களுக்குள்ளே
அனுப்பினார். சர்ப்பங்கள் அவர்களை
கடித்தது. அநேகர் இறந்தார்கள்.




"நாங்கள் பாவம் செய்தோம். இந்த சர்ப்பங்களை எடுக்க வேண்டி எங்களுக்காக வேண்டுதல் செய்யும்," ...


... என்று ஜனங்கள்
கெஞ்சினார்கள். ஆகையால்
மோசே அவர்களுக்காக
ஜெபித்தான். ஆனல்
தேவனோ சர்ப்பங்களை
எடுக்கவில்லை.


ஒரு கொள்ளிவாய் சர்ப்பத்தை
உண்டுபண்ணி அதை ஒரு
கோலிலே வைக்கச்சொன்னார்.
"யார் யார் சர்ப்பத்தால்
கடிக்கப்பட்டார்களோ
அவர்கள் கோலிலே உள்ள
சர்ப்பத்தை ...


... பார்த்தால் உயிரோடிருப்பார்கள்,"
என்று தேவன் வாக்குத்தத்தம்
பண்ணினார். மோசே
பித்தளையினால் ஒரு
சர்ப்பத்தை உண்டு
பண்ணினான் அதை பார்த்தவர்கள்
சுகம் பெற்றார்கள்.


மனுஷ குமாரனும் அந்தப்பித்தளை
சர்ப்பத்தைப் போல உயர்த்தப்படவேண்டும் என்று இயேசு நிக்கோதேமுவிடம் கூறினார், ...


... சிலுவையிலே
தாம் பாவிகளுக்காக
மரணமடைய
போவதைக்குறித்து
இயேசு
பேசினார்.


இயேசு சொன்னார்,
தேவன் தம்முடைய
ஒரே பேரான குமாரனை
விசுவாசிக்கிறவன்
எவனோ அவன்
கெட்டுப்போகாமல் ...


... நித்திய ஜீவனை
அடிப்ம்படிக்கு,
அவரைத்தந்தருளி,
இவ்வளவாய்
உலகத்தில்
அன்பு கூர்ந்தார்.


இதனுடைய அர்த்தம்
என்னவென்றால்
இயேசுவை
விசுவாசிக்கிற,
...


... அனைவரும்
தேவனுடைய
குடும்பத்தின்
பிள்ளைகளாக
பிறக்கிறார்கள்.

ஒரு வேளை அந்த இரவு நிக்கோதேமு இயேசுவினுடைய சீஷனாக மாறவில்லை, ஆனால் பல வருடங்களுக்குப் பின்னர் நிக்கோதேமு இயேசுவில் ...




... அன்பு கூர்ந்து அவரை விசுவாசித்தான்
என்பதை வெளிப்படுத்தும் விதமாக
சிலுவையில் அறையப்பட்ட
தேவகுமாரனை
அடக்கம் செய்ய
உதவினான்.

அதன் பின்பு, இயேசுவும் அவருடைய சீ
ஷர்களும் வடக்கு பகுதிக்கு பிரயாணம்
செய்தார்கள். அங்குள்ள மக்களும்
நாசரேத் ஊரானாகிய இயேசு,

...



... தேவ குமாரன் என்று நம்புவதற்கு வாய்ப்பாக அவர்களும் தேவனுடைய இராஜ்ஜியத்தை குறித்து கேள்விப்பட வேண்டியதாயிருந்தது.



ஒரு தேவாலயத்தின் தலைவன்
இயேசுவை சந்திக்கிறான்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

யோவான் 2-3, எண்ணாகமம் 21

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16